**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் III பரீட்சை – 2021 சனவரி

## (302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

**<u>வினாத்தாள் பற்றிய கண்ணோட்டம் :</u>**

இவ்வினாத்தாள் 100 புள்ளிகளை உள்ளடக்கி மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது.

1. பகுதி **A** ஆனது 20 புள்ளிகளுக்காக (தலா 05 புள்ளிகள் வீதம்) <u>நான்கு</u> கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது.
2. பகுதி **B** ஆனது 30 புள்ளிகளுக்காக (தலா 10 புள்ளிகள் வீதம்) <u>மூன்று</u> கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது.
3. பகுதி **C** ஆனது 50 புள்ளிகளுக்காக (15 புள்ளிகள், 15 புள்ளிகள், 20 புள்ளிகள்) மூன்று கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது.

**பொதுவான கருத்துக்கள் :**

இவ்வினாத்தாளுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது. எவ்வாறாயினும், சில பொதுவான தவறுகளும் காணப்பட்டன.

**பகுதிரீதியான செயலாற்றுகை:**

**பகுதி A** ஆனது 20 புள்ளிகளுக்காக 4 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. இப்பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்தியாக இருந்தது. இப்பகுதிக்கான வினா ரீதியான செயலாற்றுகை பின்வருமாறு:

| வினா இல. | செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| 1 | திருப்தியானது |
| 2 | சராசரியானது |
| 3 | திருப்தியானது |
| 4 | திருப்தியானது |

**பகுதி B** ஆனது 30 புள்ளிகளுக்காக 3 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. இப்பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்தியாக இருந்தது. இப்பகுதிக்கான வினா ரீதியான செயலாற்றுகை பின்வருமாறு:

| வினா இல. | செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| 5 | திருப்தியானது |
| 6 | திருப்தியானது |
| 7 | சராசரியானது |

**பகுதி C** ஆனது 50 புள்ளிகளுக்காக 3 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. இப்பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்தியாக இருக்கவில்லை. இப்பகுதிக்கான வினா ரீதியான செயலாற்றுகை பின்வருமாறு:

| வினா இல. | செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| 8 | மோசமானது |
| 9 | திருப்தியானது |
| 10 | திருப்தியில்லை |

## <u>பகுதி A</u>

### வினா இல. 01

இவ்வினாவின் **பகுதி (a)** ஆனது நிதிக் கணக்கீட்டிற்கும் முகாமைக் கணக்கீட்டிற்கும் இடையிலான வேறுபாட்டினைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலானவர்கள் இவ்வினாவுக்கு நன்றாக விடையளித்திருந்தனர்.

இவ்வினாவின் **பகுதி (b)** ஆனது இலாப நட்டமற்ற புள்ளி (BEP), பாதிடப்பட்ட விற்பனை கணியத்தில் எதிர்பார்க்கப்பட்ட இலாபம் ஆகியவற்றின் கணிப்பீடு பற்றிய அறிவைப் பரீட்சித்தது. பெரும்பாலா னவர்கள் இவ்வினாவுக்கு நன்றாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில மாணவர்கள் எதிர்பார்க்கப்பட்ட இலாபத்திற்குப் பதிலாக பங்களிப்பைக் கணிப்பிட்டிருந்தனர்.

**செயலாற்றுகை:** இவ்வினாவின் பகுதி (a), பகுதி (b) இற்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியானது.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்த கால வினாத்தாள்களில் உள்ள இதுபோன்ற வினாக்களைச் செய்துபார்த்துப் பயிற்சி பெறவும்.
- எண்ணக்கருக்கள் பற்றிய தெளிவான எண்ணவோட்டங்களைப் பெற சுய கற்றல் புத்தகத்தைப் படிக்கவும்.

### வினா இல. 02

இவ்வினா தொழிற்படு மூலதனச் சுழற்சிக் காலம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடையளிக்கத் தவறியிருந்தனர்.

**இனங்காணப்பட்ட பொதுவான தவறுகள்;**

- அதிகளவான மாணவர்களால் மொத்த இலாப விகிதமான 20% இலிருந்து இலாபத்தைக் கணிப்பிட இயலவில்லை. சிலர் (GP விகிதமான 20% ஐப் பயன்படுத்தி) விற்பனையாக 120 ஐக் கணிப்பிட்டிருந்தனர். இதனால் தவறான மொத்த இலாபம் பெறப்பட்டிருந்தது.
- தரப்பட்ட ஆரம்ப, இறுதி இருப்புகள் மற்றும் கணிப்பீடு செய்யப்பட்ட விற்பனைக் கிரயம் ஆகியவற்றிலிருந்து கொள்வனவுப் பெறுமதியைப் பரீட்சார்த்திகளால் துணிய முடியாதிருந்தது.
- இருப்புப் புரள்வுக் காலம் மற்றும் கடன்கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலம் ஆகியவற்றைக் கணிப்பிடுவதில் சராசரி இருப்பு மற்றும் சராசரி வியாபார சென்மதிகள் என்பன கவனத்திற் கொள்ளப்படவில்லை. சில மாணவர்கள் தொழிற்படு மூலதனச் சுழற்சிக் காலத்தைக் கணிப்பிடுவதில் முக்கிய காரணியாகவுள்ள சராசரிக் காரணியை கருத்திற் கொள்ளாது (உதாரணம்: சராசரி கடன் கொடுத்தோர் மற்றும் சராசரி தொக்கு) மூலதன சுழற்சிக் காலத்தைக் கணிப்பிட்டிருந்தனர்.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்த கால வினாத்தாள்களில் உள்ள இதுபோன்ற வினாக்களைச் செய்துபார்த்துப் பயிற்சி பெறவும்.
- எண்ணக்கருக்கள் பற்றிய தெளிவான எண்ணவோட்டங்களைப் பெற சுய கற்றல் புத்தகத்தைப் படிக்கவும்.

## வினா இல. 03

இவ்வினா தரப்பட்டிருந்த நிலையான பாதீடு மற்றும் உண்மைத் தகவல்களைப் பயன்படுத்தி நெகிழ்வுப் பாதீட்டைக் (செயற்பாட்டுக் கூற்று) கணிப்பிடுவது பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலானவர்கள் இவ்வினாவுக்கு நன்றாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், கீழ்வரும் தவறுகளும் இனங்காணப்பட்டன;

- சில பரீட்சார்த்திகள் நிலையான பாதீடு மற்றும் உண்மைத் தகவல்களிலிருந்து பெற்ற முரண்களைக் காட்டாது நெகிழ்வுப் பாதீட்டைக் கணிப்பிட்டிருந்தனர்.
- தவறான அலகுகளின் எண்ணிக்கையைப் பயன்படுத்தி நிலையான கிரயம் பகிரப்பட்டிருந்தது.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியானது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்தகால வினாத்தாள்களில் இதே வகையான வினாக்களில் பயிற்சி பெறவும்.
- எண்ணக்கருக்கள் பற்றிய தெளிவான எண்ணவோட்டங்களைப் பெற சுய கற்றல் புத்தகத்தைப் படிக்கவும்.
- மாணவர்கள் சகல செய்கை வழிகளையும் காட்டுதல் வேண்டும்.
- வினாவுக்கு விடையளிக்க முன் வினாவைச் சரியாக வாசிக்கவும்.

## வினா இல. 04

இவ்வினா உற்பத்திப் பொருளுக்கான கட்டளையை ஏற்றுக் கொள்வதா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பது மீதான அறிவைப் பரீட்சித்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நன்றாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், கீழ்வரும் பொதுவான தவறுகளும் இனங்காணப்பட்டன;

- ஆலோசகருக்கான ஆய்வுக் கிரயமானது இந்தக் கட்டளையை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் செலவுசெய்யப்பட்ட இந்தக் கட்டளைக்கான கிரயம் ஒன்றாகக் கருதப்பட வேண்டியதில்லை என்பதுடன் அதனை ஆழ்ந்த கிரயமாக கருத வேண்டும். சராசரி எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் இந்தக் கிரயத்தை ஒரு ஆழ்ந்த கிரயமாக எடுத்துக்காட்டியிருந்தனர் ஆயினும் விசேட கட்டளைக் கிரயத்திற்கு எடுத்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் அதனைக் கருத்திற் கொண்டிருக்கவில்லை என்பதுடன் ஆழ்ந்த கிரயம் ஒன்றாகவும் குறிப்பிட்டிருக்கவில்லை.

- சில பரீட்சார்த்திகள் வெளிமூலமிடப்பட்ட கூலித் தொகையை கணிப்பிட்டிருக்கவில்லை. வெளிமூலமிடப்பட்ட கூலிக் கிரயமானது தொழிற்சாலைக் கூலிக் கிரயத்தை விட மலிவானதாகும். எனவே, கூலிக் கிரயமானது வெளிமூலமிடப்பட வேண்டும்.
- சில பரீட்சார்த்திகள் சந்தர்ப்பச் செலவு ரூபா 1.25 மில்லியனை இனங்காணத் தவறியிருந்தனர். நிதிசார் ரீதியில் நன்மையளிக்கின்ற சந்தர்ப்பச் செலவானது தற்போதைய பொருள் உற்பத்தியைப் பிற்போடுவதால் இழக்கப்படுகிறது.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியானது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- மாணவர்கள் தங்களது செய்கை வழிகளின் இறுதியில் பெற்ற முடிவினை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
- கடந்த கால வினாத்தாள்களில் உள்ள இதுபோன்ற வினாக்களைச் செய்துபார்த்துப் பயிற்சி பெறவும்.
- எண்ணக்கருக்கள் பற்றிய தெளிவான எண்ணவோட்டங்களைப் பெற சுய கற்றல் புத்தகத்தைப் படிக்கவும்.

## பகுதி B

## வினா இல. 05

இவ்வினா, தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி 2021 ஏப்ரல் தொடக்கம் யூன் மாதம் வரையுள்ள காலப்பகுதிக்கான காசுப் பாதீட்டைத் தயாரிப்பது பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. குறிப்பிடத்தக்க அளவிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நன்றாக விடையளித்திருந்ததுடன் அவர்கள் சம்பந்தப்பட்ட மாதத்திற்குரிய வருமானம் மற்றும் செலவினங்களையும் சரியாக இனங்கண்டிருந்தனர். எவ்வாறாயினும், பின்வரும் பொதுவான தவறுகளும் இனங்காணப்பட்டிருந்தன;

- செலவு செய்யப்பட்ட பொதியிடல் மற்றும் விநியோகச் செலவினங்கள் அந்த மாதத்தில் காட்டப்பட்டிருந்தன. 60 நாட்கள் என்ற கடன் காலப்பகுதியானது காசுப் பாய்வில் கருத்திற் கொள்ளப்படவில்லை.
- செலவு செய்யப்பட்ட மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசிக் கட்டணங்கள் அடுத்துவரும் மாதத்தில் காட்டப்பட வேண்டும் என்ற போதிலும், அவை அந்த மாதத்திலேயே காட்டப்பட்டன.
- மாதாந்த வாடகை ரூபா 50,000/= காலாண்டிற்கு ஒரு முறை செலுத்தப்படுகிறது. ஆயினும் இது, அடுத்துவரும் காலாண்டிற்குப் பதிலாக அடுத்துவரும் மாதத்திலுள்ள காசுப் பாய்வில் பிழையாகக் காட்டப்பட்டது.
- காசுப் பாய்வை முன்வைப்பது சில பரீட்சார்த்திகளால் மேற்கொள்ளப்படவில்லை. ஆரம்ப மற்றும் இறுதி காசு மீதிகள் தெளிவாகக் காட்டப்படவில்லை.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியானது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்தகால வினாத்தாள்களில் இதே வகையான வினாக்களில் பயிற்சி பெறவும்.
- எண்ணக்கருக்கள் பற்றிய தெளிவான எண்ணவோட்டங்களைப் பெற சுய கற்றல் புத்தகத்தைப் படிக்கவும்.
- மாணவர்கள் சகல செய்கை வழிகளையும் காட்டுதல் வேண்டும்.
- வினாவுக்கு விடையளிக்க முன் வினாவை நன்கு வாசிக்கவும்.

## வினா இல. 06

வினாவின் **பகுதி (a)** ஆனது, தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி வரையறைக் காரணிகளை இனங்காணும் மாணவர்களின் அறிவைப் பரீட்சித்திருந்தது.

வினாவின் **பகுதி (b)** ஆனது பகுதி (a) இல் இனங்கண்ட வரையறைக் காரணிகளின் அடிப்படையில் உத்தம உற்பத்திக் கலவையை கணிப்பிடும் அறிவைப் பரீட்சித்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நன்றாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், பின்வரும் பொதுவான தவறுகளும் இனங்காணப்பட்டன;

- பகுதி (a) ஆனது வரையறைக் காரணிகளை இனங்காணத் தேவைப்படுத்தியிருந்த போதிலும், அதிகளவான மாணவர்கள் தரம் B இலுள்ள திறமையான கூலியை வரையறைக் காரணியாக கண்டறிந்திருந்திருந்தனர் எனினும் திறமையற்ற கூலியை வரையறைக் காரணியா அல்லது இல்லையா என்பதை இனங்கண்டிருக்கவில்லை. எனவே, கணிப்பீட்டைச் சரியாகக் காட்டாததால் அவர்கள் புள்ளிகளை இழந்திருந்தனர்.
- பங்களிப்பினைக் கணிப்பிடும்போது நேர் மூலப்பொருள் மாறும் கிரயம் ஒன்றாகக் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியானது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்தகால வினாத்தாள்களில் இதே வகையான வினாக்களில் பயிற்சி பெறவும்.
- பரீட்சார்த்திகள் வரையறைக் காரணி பற்றிய அறிவை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

## வினா இல. 07

இவ்வினா சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம், மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம், மீட்கப்படத்தக்க தனிச்சங்களின் கிரயம் மற்றும் சந்தைப் பெறுமதியைப் பயன்படுத்தி நிறையேற்றிய சராசரி மூலதனக் கிரயம் (WACC) ஆகியவற்றைக் கணிப்பிடுவது பற்றிய அறிவைப் பரீட்சித்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சாதாரண வாங்குரிமைப் பங்குகளின் கிரயம் மற்றும் மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம் ஆகியவற்றின் கணிப்பீடுகளைச் சரியாக மேற்கொண்டிருந்தனர். ஆனால் மீட்கப்படத்தக்க தனிச்சங்களின் கிரயம் மற்றும் WACC இன் கணிப்பீடுகள் என்பன மிகக் குறைவானவர்களாலேயே சரியாக

மேற்கொள்ளப்பட்டிருந்தன. கீழ்வரும் தவறுகள் இனங்காணப்பட்டன:

- மீட்கப்படத்தக்க தனிச்சங்களின் கிரயத்தைக் கணிப்பிடும்போது பரீட்சார்த்திகளின் IRR பற்றிய அறிவு மிகக் குறைந்தளவில் இருந்ததை காணக்கூடியதாக இருந்தது.
- WACC ஆனது சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் கணிப்பிடப்படவில்லை.
- மூலதனக் கிரயமானது சதவீதமொன்றாக வெளிப்படுத்தவில்லை.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்தகால வினாத்தாள்களில் இதே வகையான வினாக்களில் பயிற்சி பெறவும்.
- சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம், மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம், மீட்கப்படத்தக்க தனிச்சங்களின் கிரயம் மற்றும் WACC ஆகியவற்றைக் கணிப்பிடுவதற்கான சூத்திரங்கள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளவும்.

## பகுதி C

### வினா இல. 08

இவ்வினா முரண் பகுப்பாய்வு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. மேலும், இது உண்மையான நேர் மூலப்பொருட்களின் பாவனை, நேர் கூலி கலவை முரண், நேர் கூலி விளைவு முரண் ஆகியவற்றின் கணிப்பீட்டையும் தொழிற்பாட்டுக் கூற்றின் தயாரிப்பையும் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்கவில்லை. இவ்வினாவுக்கு விடையளித்திருந்த பரீட்சார்த்திகளிடமிருந்து பின்வரும் தவறுகள் இனங்காணப்பட்டிருந்தன.

- பெரும்பாலான பரீட்சார்த்திகள் முரண்கள் மற்றும் நியமக் கிரயமிடல் எண்ணக்கரு பற்றிய சரியான அறிவைக் கொண்டிருக்கவில்லை.
- பரீட்சார்த்திகள் இலகுவாக உண்மையான பாவனையைக் கணிப்பிடுவதற்கு ஏதுவாக, வினாவில் மூலப்பொருள் முரண் மற்றும் சூத்திரம் என்பன தரப்பட்டிருந்த போதிலும் அதிகளவான பரீட்சார்த்திகள் உண்மையான பொருள் பாவனையைச் சரியாகக் கணிப்பிடவில்லை.
- அதிகளவான பரீட்சார்த்திகள் கூலியின் கலவை, விளைவு முரண்களைக் கணிப்பிடுவதற்குச் சிரமப்பட்டிருந்தனர்.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மோசமானது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்தகால வினாத்தாள்களில் இதே வகையான வினாக்களில் பயிற்சி பெறவும்.
- எண்ணக்கருக்கள் பற்றிய தெளிவான எண்ணவோட்டங்களைப் பெற சுய கற்றல் புத்தகத்தைப் படிக்கவும்.
- மாணவர்கள் சகல செய்கை வழிகளையும் காட்டுதல் வேண்டும்.

## வினா இல. 09

இவ்வினா நிகர இற்றைப் பெறுமதியைக் (NPV) கணிப்பிடுதல் மற்றும் முதலீட்டின் சாத்தியத்தன்மையை மதிப்பிடுதல் ஆகியன தொடர்பில் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நன்றாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், பின்வரும் பொதுவான தவறுகளும் இனங்காணப்பட்டன;

- சில பரீட்சார்த்திகள் NPV கணிப்பீட்டில் மொத்த வருமானமாக வினாவில் தரப்பட்ட கணியத்தை எடுத்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் நேர் மூலப்பொருள், நேர் கூலி மற்றும் மாறும் மேந்தலைக் கிரயங்களுக்கான அலகு விற்பனை விலையினை அதனது கணியத்துடன் பெருக்காது பயன்படுத்தியிருந்தனர்.
- பல பரீட்சார்த்திகள் தேய்மானத் தொகையான ரூபா 24 மில்லியனைக் கவனத்தில் கொள்ளாது நிலையான கிரயமாக ரூபா 30 மில்லியனை கழித்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் வரிவிதிக்கத்தக்க இலாபத்தைக் கணிப்பிடும்போது சகல 5 ஆண்டு களுக்குமான காசு இலாபத்திலிருந்து ரூபா 30 மில்லியன் மூலதன விடுதொகையை (படியை) கழித்திருந்தனர்.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியானது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்தகால வினாத்தாள்களில் இதே வகையான வினாக்களில் பயிற்சி பெறவும்.
- எண்ணக்கருக்கள் பற்றிய தெளிவான எண்ணவோட்டங்களைப் பெற சுய கற்றல் புத்தகத்தைப் படிக்கவும்.
- மாணவர்கள் சகல செய்கை வழிகளையும் காட்டுதல் வேண்டும்.

## வினா இல. 10

இவ்வினாவின் பகுதி (a) ஆனது செயன்முறைக் கிரயமிடல் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இங்கு சமான அலகுகள் கூற்றினையும் செயன்முறைக் கணக்கையும் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு நன்றாக விடையளித்திருந்தனர். ஆனால் சொற்பளவான பரீட்சார்த்திகள் சமான அலகுகள் கூற்றைத் தயாரிப்பதற்கான போதியளவு அறிவைக் கொண்டிருக்க வில்லை என்பதுடன் குறிப்பாக இறுதிப் புத்துருவாகும் வேலைகளுக்கான சமான அலகுகளைக் கணிப்பிடுவதற்கான அறிவை அவர்கள் கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. மேலும், சில பரீட்சார்த்திகள் கூற்றிற்கான அசாதாரண நட்டத்தின் சமான அலகுகளையும் கூற்றில் சாதாரண நட்டத்தின் ஒடிவுப் பெறுமதியையும் எடுத்திருக்கவில்லை.

வினாவின் பகுதி (b) ஆனது தீர்மான மர கோட்பாட்டின் அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்கின்ற அறிவைப் பரீட்சித்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் தீர்மான மரத்தைத் தெளிவாக வரைந்திருக்க வில்லை. மேலும், அதிகளவான பரீட்சார்த்திகள் தங்களுடைய செய்கை வழிகளையும் காட்டியிருக்க வில்லை.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியாக இல்லை.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்தகால வினாத்தாள்களில் இதே வகையான வினாக்களில் பயிற்சி பெறவும்.
- எண்ணக்கருக்கள் பற்றிய தெளிவான எண்ணவோட்டங்களைப் பெற சுய கற்றல் புத்தகத்தைப் படிக்கவும்.
- மாணவர்கள் சகல செய்கை வழிகளையும் காட்டுதல் வேண்டும்.

* * *